அ.வ.எண்: 126/2016 நாள்: 16.04.2026

பி.வா.சா.1 – பாண்டி

சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

சாட்சியின் ஆதார் அட்டை சரிபார்க்கப்பட்டது.

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

1. வெள்ளைச்சாமி என்பவரது பூர்விக வீடு சர்வே எண் 610/8–ல் உள்ளது என்றால் சரிதான். மேற்படி வீடு நான் பிறப்பதற்கு முன்பாக கட்டப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வீடு கட்டி சுமார் 150 வருடங்கள் இருக்கும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி வீடு ஓட்டு வீடு என்றால் சரிதான். மேற்படி வீடு எத்தனை பத்திகளை கொண்டது என்றால், மேற்படி வீட்டின் தென்புறம் வாரம் இறக்கி உள்ளார்கள், அதை தவிர மற்ற அமைப்புகளை பற்றி எனக்கு தெரியாது. மேற்படி தென்புறம் உள்ள வாரம் வீடு கட்டும் பொழுது அமைக்கப்பட்டதா என்றால், அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி வீடு பாதையை ஆக்கிரமித்து அமைக்கப்பட்டுள்ளது என்ற விவரம் சர்வேயர் வந்து அளந்த பிறகு தான் எனக்கு தெரியுமா என்றால், அதற்கு முன்பாகவே எனக்கு தெரியும். மேற்படி ஆக்கிரமிப்பு குறித்து எனக்கு எப்பொழுது தெரியும் என்றால் சுமார் 25 வருடங்களுக்கு முன்பாகவே தெரியும்.

2. ஆக்கிரமிப்பு இருப்பது தெரிந்து இருந்தும் அதனை அகற்றுவதற்கான நடவடிக்கைகள் நான் எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான்,

ஆக்கிரமிப்பு  தெரிந்தும் நாங்கள் நல்ல உறவு முறையில் இருந்ததால் இருக்கட்டும் என்று விட்டு விட்டோம். அவர் O.S.126/2016 வழக்கை தாக்கல் செய்த பிறகு தான், நான் O.S.94/2018 வழக்கை தாக்கல் செய்து ஆக்கிரமிப்பை அகற்ற சொல்லி கூறியுள்ளேன். சர்வே எண் 610/8–ல் உள்ள வீடு, நத்தம் சர்வேக்கு முன்பாகவே கட்டப்பட்ட வீடு என்றால் இருக்கலாம். நத்தம் சர்வேயின் போது வீடு கட்டப்பட்டுள்ள இடங்களுக்கு பட்டா கொடுத்துவிட்டு, மற்ற இடங்கள் பட்டா கொடுக்காமல் விடுபட்டுவிட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவாசொத்திற்கு கிழக்கே உள்ள எனது பூர்வீக வீடு நத்தம் சர்வேக்கு முன்பாகவே கட்டப்பட்டது என்றால் சரிதான், அந்த வீட்டிற்கும் நத்தம் சர்வேயின் போது தான் பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான்.

3. மேற்படி எனது வீட்டிற்கு மேற்கு புறமும், தெற்கு புறமும் பாதை உள்ளது என்றால், மேற்கு பக்கம் பாதை உள்ளது, தெற்கு பக்கம் ரோடு உள்ளது. எனது பூர்வீக வீட்டின் விஸ்தீரணம் என்ன என்றால், சுமார் 4 சென்ட் இருக்கும். பொதுவாக வீடு கட்டும் பொழுது ஒரு சிலர் வீட்டிற்கு முன்பாக புழக்கத்திற்கு இடம் விடுவார்கள், ஒரு சிலர் வீட்டிற்கு பின்பாக புழக்கத்திற்கு இடம் விடுவார்கள் என்றால் சரிதான். அதேபோல பிரதிவாதிகள் சர்வே எண் 610/8–ல் வீடு கட்டி விட்டு முன்புறமுள்ள இடத்தை புழக்கத்திற்காகவும், பாதைக்காகவும் விட்டு வைத்திருந்தார்கள் என்றால் சரியல்ல. சர்வே எண் 610/11 காலி இடமாக இருந்தது என்றும், அதில் ஒரு கொட்டகை இருப்பது போல அமைப்பைக் காட்டி எனது

பங்காளிகள் 7 நபர்களின் பெயரில் அவர்களின் செல்வாக்கை பயன்படுத்தி கூட்டு பட்டா பெற்றுக் கொண்டார்கள் என்றால் சரியல்ல.

4. மேற்படி சர்வே எண் 610/11–ல் இருந்த கொட்டகை எப்பொழுது வரை இருந்தது என்றால் 2010 வரை இருந்தது. மேற்படி சர்வே எண் 610/11–ல் 2010 வரை கொட்டகை இருந்தது என்பதற்கான ஆவணங்கள் எதையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் எந்த காலத்திலும் சர்வே எண் 610/11–ல் கொட்டகை இல்லை என்றும், அது காலி இடமாகத் தான் இருந்தது என்றும், அது சர்வே எண் 7, 8, 9 ஆகிய இடங்களில் உள்ள வீட்டுகளுக்கு செல்வதற்கு பாதையாக பயன்படுத்தப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. மேற்படி சர்வே எண் 610/8–ல் உள்ள வீடு நத்தம் சர்வேக்கு முன்பாக கட்டப்பட்டது என்றும், நத்தம் சர்வேயின் போது அதில் ஒரு பகுதி பாதையை ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக கூறுவதற்கு வாய்ப்பு இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. நத்தம் சர்வேயின்போது வீடு உள்ள பகுதியை பாதையாக வகைப்பாடு செய்யப்பட்டதிலிருந்து மேற்படி வரைபடம் ஆனது, எனது செல்வாக்கை பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

5. சர்வே எண் 610/11–க்கு என் பெயர் பட்டா மாறுவதற்கு முன்பாக யார் பெயரில் பட்டா இருந்தது என்றால், எனது தம்பி கதிர் காமநாதன் பெயரில் இருந்தது. கதிர்காமநாதன் எனக்கு கிரையம் கொடுத்துள்ளாரா என்றால் தான செட்டில்மெண்ட் கொடுத்துள்ளார். கதிர் காமநாதனுக்கு மற்ற

பங்காளிகள் 7 நபர்கள் கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி கதிர்காமநாதனுக்கு எவ்வளவு இடம் கிரையம் கொடுத்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு நினைவில் இல்லை. எந்த வருடம் கதிர்காமநாதனுக்கு கிரையம் கொடுக்கப்பட்டது என்றால் 2010 ஆம் ஆண்டு கிரையம் கொடுக்கப்பட்டது. மேற்படி கிரையம் கொடுக்கப்பட்ட காலத்தில் சர்வே எண் 610/11 ல் கொட்டகை இருந்தது என்றால் சரிதான். மேற்படி கொட்டகையும் சேர்த்து தான் அவர் கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். மேற்படி கிரையப் பத்திரத்தில் சர்வே எண் 610/11–ல் கொட்டகை இருந்ததாக குறிப்பிடப்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஒரு சொத்தில் கொட்டகையோ வீடோ இருந்தால் அதற்கும் சேர்த்து முத்திரை தீர்வு செலுத்த வேண்டும் என்றால் அது சிதிலமடைந்த ஓலை கொட்டகை என்பதால் அதை மதிப்பிடவில்லை.

6. சர்வே எண் 610/11–ல் கூரை கொட்டகை இருந்தது என்று கூட மேற்படி பத்திரத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி பத்திரத்தில் என்ன நான்குமால் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், கிழமேல் சந்துக்கும் தெற்கு, தென்வடல் தெருவுக்கு மேற்கு, கிழமேல் தெருவுக்கும் வடக்கு, தென்வடல் சந்துக்கும் கிழக்கு. மேற்படி நான்குமாலுக்கு உட்பட்ட காலி மனை இடமும், சகல சுவாதீனங்களும் என்றுதான் பி.வா.சா.ஆ.2 ஆவணமான கிரைய பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். (**சாட்சியிடம் பி.வா.சா.ஆ. 2 ஆவணம் காட்டப்பட்டது**). மேற்படி கிரையப் பத்திரம் வாங்கி எத்தனை ஆண்டுகள் கழித்து எனக்கு

தான செட்டில்மெண்ட் எழுதி கொடுக்கப்பட்டது என்றால், 2016 ஆம் ஆண்டு எனக்கு தான செட்டில்மெண்ட் எழுதிக் கொடுக்கப்பட்டது.

7. எனக்கு எழுதிக் கொடுக்கப்பட்ட இனாம் செட்டில்மென்ட் ஆவணம் பி.வா.சா.ஆ.3 ஆவணமாக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் இணைக்கப்பட்டுள்ள 2 பத்து ரூபாய் பத்திரங்கள் எதற்காக இணைக்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

மேற்படி இணைக்கப்பட்ட பத்திரங்கள் ஆவண எண் 3473/2010 என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். ஆவண எண் 3473 என்பது மேற்படி தான செட்டில்மெண்ட் ஆவணம் தான் என்றால் சரிதான். சர்வே எண் 610/11 எந்த காலத்திலும் எனக்கோ எனது பங்காளிகளுக்கோ பாத்தியப்பட்டது இல்லை என்றும், அதனால் தான் எனது பங்காளிகள் மோசடியாக எனது சகோதரருக்கு கிரைய பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார் என்றும், அவரிடம் இருந்து நான் ஒரு மோசடியான தான செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வாங்கியுள்ளேன் என்றும், பிரதிவாதிகளின் இடத்தை ஆக்கிரமிப்பு செய்யும் எண்ணத்துடன் மோசடி ஆவணங்களை உற்பத்தி செய்துள்ளோம் என்றும் சொன்னால் சரியல்ல. எனது பங்காளிகள் எனது சகோதரருக்கு கிரைய பத்திரம் எழுதிக் கொடுக்கும் பொழுது எந்த ஒரு தொகையும் பெற்றுக் கொள்ளவில்லை என்றால் சரியல்ல.

8. நான் எனது சகோதரர்களிடமிருந்து தான செட்டில்மெண்ட் ஆவணம் பெரும்பொழுதும் எந்த ஒரு தொகையும் நான் அவருக்கு கொடுக்கவில்லை என்றால், நான் பழைய வீட்டை அவருக்கு

கொடுப்பதாக ஒப்புக்கொண்டேன். நான் பழைய வீட்டை அவருக்கு கொடுப்பதாக ஒப்புக்கொண்டது குறித்து மேற்படி தான செட்டில்மெண்ட் ஆவணத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். தாவா பிராதில் சொத்திற்கான நான்குமால் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். (**சாட்சியிடம் தாவா பிராது காட்டப்பட்டது**). மேற்படி பிராதில் சொத்து விவரம் குறிப்பிட்டுள்ளேன் என்றும், ஆனால் நான்குமால் குறிப்பிடவில்லை என்றும் சொன்னால் சரிதான். 2012 ஆம் ஆண்டு பழனியப்பன் என்பவரிடமிருந்து எனது தம்பி கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான், அவர் அப்பொழுது இல்லாததால் அவரிடம் 2012 ஆம் ஆண்டு எனது தம்பி கிரையம் பெற்றார். அவரிடம் எவ்வளவு பணம் கொடுத்து எனது தம்பி கிரையம் வாங்கினார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

9. எனது தம்பி கிரையம் வாங்கும் பொழுது நானும் உடன் இருந்தேன் என்றால் சரிதான். எனது தந்தையின் வாரிசாக நானும் மேற்படி பத்திரங்களில் கையெழுத்து செய்துள்ளேன். நானும் ஒரு தரப்பினராக இருந்து எனது சகோதரருக்கு எழுதிக் கொடுத்த கிரைய பத்திரங்களுக்காக எந்த ஒரு கிரைய தொகையும் நான் பெற்றுக் கொள்ளவில்லை என்றால் சரிதான். மற்ற நபர்களுக்கு எனது சகோதரர் எவ்வளவு கிரைய தொகை கொடுத்தார் என்ற விவரம் தெரியுமா என்றால், எனக்கு நேரடியாக தெரியாது.

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

PREMI R

Digitally signed by PREMI R
Date: 2026.04.16 15:01:18 +0530